முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.

**இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு**

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 828

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

04.01.2022, செவ்வாய்கிழமை

1. ஓங்கார சூட்சும குருராஜனே
   ஓங்கார தவசியாய் வாழும் தேசிகனே
   ஓங்காரன் என் ஞான வடிவாகவே
   உலகமாற்றம் செய்வதற்கு வந்துதித்த மாதவசியே
2. தவசியே அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   தக்க பிலவ சிலை திங்கள் தன்னில்
   (பிலவ வருடம் மார்கழி மாதம் 20ம் நாள், 04.01.2022 செவ்வாய்கிழமை)
   அவதார நோக்கமாக அரங்கன் உமக்கு
   அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
3. ஆசிதனை உலகமக்களும் ஞானமாக ஏற்று
   ஐயம் நீங்கி சன்மார்க்க உயர் நெறிக்கு வர
   வாசியோகம் வருவோர்க்கு சர்வ சூட்சுமம்
   வரமாக உன்வழி கிட்டவே ஆறுமுகன் உரைப்பேன்
4. உரைக்கவே உன் மார்க்கம் உயர் மார்க்கம்
   உந்தனுக்குள் யானிருந்து வழிநடத்த
   குறைபோக்கும் ஞானசக்தி மகாசக்தி
   குருஅருளாக உன்வழி யானே அருள
5. அருளுகின்ற இந்த அற்புதத்தை
   அரங்கன் தொண்டர்களே முதலில் காண்பரப்பா
   அருளுகின்ற இந்த உலகமாற்றத்தை
   அரங்கன் தொண்டரைக்கொண்டே ஆறுமுகன் நடத்துவேனப்பா
6. அப்பனே அரங்கன் சொல்செயல் அனைத்தும் ஆறுமுகன் என் அருளுபதேசமாகும்
   ஆகவே அரங்கன் வகுத்த கொள்கைகளை அகிலத்தார் பின்பற்றினால் போதும்
   யுகம் தானாக மாற்றம் பெறும்
   உயிர்கொலை நீக்கி ஜீவதயவுமிக்க நல்மார்க்கத்தை
7. மார்க்கத்தை உலகம் பின்பற்றினால் போதும்
   மண்ணுலகம் ஆபத்தை வென்று அமைதி பாதுகாப்பு
   வகையான தயவுமிக்க ஞானவான்கள் தலைமையில்
   வடிவேலன் என் ஞான ஆட்சியாக மாற்றம் பெறும்

8. மாற்றத்தை தரவேண்டியே மாதவசி
மண்ணுலகில் அரங்கனை ஆற்றல்பட யான் படைத்துள்ளேன்
பூதலத்தார் சடுதி அரங்கன் வழிக்கு வந்து புகழ்தரும் மார்க்கத்தை ஏற்றால் போதும்
ஆதரவாய் உலகோர்க்கு அழியாமையும் அரங்கன்வழி பேரின்ப ஞானமும் சித்திக்கும்
இதுஉறுதியப்பா

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–